# 51/2026-T

| Question Booklet Alpha Code | A | Question Booklet Serial Number |
|---|---|---|

**Total Number of Questions : 100** **Time : 1 Hour 30 Minutes**

**Maximum Marks : 100**

**INSTRUCTIONS TO CANDIDATES**

A

1. The question paper will be given in the form of a Question Booklet. There will be four versions of question booklets with question booklet Alpha Code viz. A, B, C & D.
2. The Question Booklet Alpha Code will be printed on the top left margin of the facing sheet of the question booklet.
3. The Question Booklet Alpha Code allotted to you will be noted in your seating position in the Examination Hall.
4. If you get a question booklet where the Alpha Code does not match to the allotted Alpha Code in the seating position, please draw the attention of the Invigilator IMMEDIATELY.
5. The Question Booklet Serial Number is printed on the top right margin of the facing sheet. If your question booklet is unnumbered, please get it replaced by new question booklet with same Alpha Code.
6. The question booklet will be sealed at the middle of the right margin. Candidate should not open the question booklet until the indication is given to start answering.
7. Immediately after the commencement of the examination, the candidate should check that the question booklet supplied to him/her contains all the 100 questions in serial order. The question booklet does not have unprinted or torn or missing pages and if so, he/she should bring it to the notice of the Invigilator and get it replaced by a complete booklet with same Alpha Code. This is most important.
8. A blank sheet of paper is attached to the question booklet. This may be used for rough work.
9. **Please read carefully all the instructions on the reverse of the Answer Sheet before marking your answers.**
10. Each question is provided with four choices (A), (B), (C) and (D) having one correct answer. Choose the correct answer and darken the bubble corresponding to the question number using Blue or Black Ball Point Pen in the OMR Answer Sheet.
11. **Each correct answer carries 1 mark and for each wrong answer 1/3 mark will be deducted. No negative mark for unattended questions.**
12. No candidate will be allowed to leave the examination hall till the end of the session and without handing over his/her Answer Sheet to the Invigilator. Candidates should ensure that the Invigilator has verified all the entries in the Register Number Coding Sheet and that the Invigilator has affixed his/her signature in the space provided.
13. Strict compliance of instructions is essential. Any malpractice or attempt to commit any kind of malpractice in the Examination will result in the disqualification of the candidate.

DO NOT WRITE HERE

1. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றிலிருந்து தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்:

(a) வாஸ்கோடகாமா 1498-ஆம் ஆண்டு மலபார் கடற்கரையை வந்தடைந்தார்.

(b) போர்ச்சுகீசியர்கள் 1599-ல் குஞ்சாலி மரைக்காயர்-IV-ஐ தூக்கிலிட்டனர்.

(c) 1604–ஆம் ஆண்டு டச்சுக்காரர்கள் கோழிக்கோட்டை வந்தடைந்தனர்.

(d) இந்தியாவில் டச்சு ஆட்சி 1741-ல் குளச்சல் போருடன் முடிவுக்கு வந்தது.

(A) a (B) b

(C) c (D) d

2. இரண்டு சரியான கூற்றுகளைக் கொண்ட பதிலை தேர்ந்தெடுக்கவும்:

(a) மலையாளத்தில் அச்சிடப்பட்ட முதல் புத்தகம் 1772-இல் வெளியான ‘சம்ஷேப வேதார்த்தம்’ ஆகும்.

(b) ‘ராஜ்ய சமாச்சாரம்’ மற்றும் ‘பச்சிமோதயம்’ ஆகியவை 1845-இல் ஹெர்மன் குண்டர்ட் வெளியிட்ட மலையாள செய்தித்தாள்களின் பெயர்கள்.

(c) சர்ச் மிஷன் சொசைட்டி 1812-இல் கோட்டயத்தில் ஒரு கல்லூரியையும் ஒரு செமினரியையும் நிறுவியது.

(d) பேசல் எவாஞ்சலிக்கல் மிஷன் 1841-ஆம் ஆண்டு கண்ணூரில் உள்ள பர்னசேரியில் ஒரு ஆங்கிலப் பள்ளியை நிறுவியது.

(A) a and b (B) b and c

(C) c and d (D) a and d

3. பின்வரும் நிகழ்வுகளை காலவரிசைப்படி அமைத்து எழுதவும்:

(a) கிழக்கு இந்திய கம்பெனி, முதன்முறையாக, பாம்பே-தக்காண மலைப்பகுதியில் வரி சீர்திருத்தங்களை நிறுவுகிறது.

(b) பிரிட்டிஷ் பாராளுமன்ற ஒழுங்குமுறை சட்டம் நிறுவப்பட்டது.

(c) கிழக்கு இந்திய கம்பெனி வங்காளத்தில் நிலையான வரிவிதிப்பு முறையை நிறுவுகிறது.

(d) சந்தால் கிளர்ச்சி தொடங்குகிறது.

(A) a, b, c, d (B) b, c, a, d

(C) c, d, b, a (D) d, a, c, b

4. கீழே பட்டியலிடப்பட்டுள்ள கூற்றுகளிலிருந்து, சரியான இரண்டைத் தேர்ந்தெடுக்கவும்:
   (a) மகாத்மா காந்தி 1892 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்கா சென்றார்.
   (b) தென்னாப்பிரிக்காவில் தங்கியிருந்த மகாத்மா காந்தி ஜனவரி 09, 1915 அன்று இந்தியா திரும்பினார்.
   (c) 1915–பிப்ரவரியில் பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் தொடக்க விழா, தென்னாப்பிரிக்காவில் இருந்து இந்தியா திரும்பிய பிறகு மகாத்மா காந்தி பங்கேற்ற முதல் பொது நிகழ்வாகும்.
   (d) 1917-ல் நடைபெற்ற சம்பாரண் சத்யாகிரகம், இந்தியாவில் காந்திஜியின் முதல் சத்யாகிரகமாகும்.
   (A) a & b (B) b & c
   (C) b & d (D) a & d

5. கீழே உள்ள கூற்றுகளிலிருந்து சரியான விருப்பத்தேர்வை தேர்ந்தெடுக்கவும்:
   (a) சீன கம்யூனிஸ்ட் கட்சி 1922 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
   (b) 1935-36 இல் மாவோவின் தலைமையில் நீண்ட பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது.
   (c) 1946 ஆம் ஆண்டு மாவோவின் தலைமையில் மக்கள் குடியரசு உருவாக்கப்பட்டது.
   (d) மாவோ 1975 ஆம் ஆண்டு இறந்தார்.
   (A) a (B) b
   (C) c (D) d

6. 2025 ஆம் ஆண்டிற்கான இயற்பியலுக்கான நோபல் பரிசை வென்றவர் யார்?
   (A) ஜோயல் மோகிர் (B) ஜான் எம். மோர்ட்டன்ஸ்
   (C) பிலிப் ஆக்யா (D) பீட்டர் ஹவுட்

7. இந்த தேசிய நெடுஞ்சாலைகளில் எது கேரளாவின் வழியாகச் செல்லவில்லை?
   (A) 966B (B) 866
   (C) 183A (D) 130C

8. நதி படுகையிலிருந்து தீபகற்ப பீடபூமி எவ்வளவு உயரத்தில் அமைந்துள்ளது?
   (A) 90 மீட்டர் – 500 முதல் 600 மீட்டர் வரை
   (B) 100 மீட்டர் – 400 முதல் 500 மீட்டர் வரை
   (C) 150 மீட்டர் – 600 முதல் 900 மீட்டர் வரை
   (D) 900 மீட்டர் – 1200 மீட்டர் வரை

9. சிறிய ஆறுகள் மற்றும் சிற்றோடைகளின் மழை நீர்ப்பிடிப்பு பகுதிகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
   (A) நீர்த்தடங்கள் (Neer Thadangal)
   (B) ஜலபிவாஜகம் (Jalabhivaajakam)
   (C) நதிதடங்கள் (Nadhi Thadankal)
   (D) மழவெள்ளக்கொய்த் (Mazha Vellakoyth)

10. பல்வேறு வகையான வறட்சிகளைக் கருத்தில் கொண்டு, கீழே பட்டியலிடப்பட்டுள்ளவற்றில் இருந்து மிகவும் சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்:

(i) ஒரு பகுதியில் நீண்ட காலமாக சராசரி மழைப்பொழிவு படிப்படியாகக் குறையும் நிகழ்வு, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் வறட்சி என்று அழைக்கப்படுகிறது.

(ii) பயிர் வளரத் தேவையான ஈரப்பதம் மண்ணில் இல்லாதபோது விவசாய வறட்சி ஏற்படுகிறது.

(iii) நீர்நிலைகள் மற்றும் குளங்கள் போன்ற பல்வேறு நீர் ஆதாரங்களுக்கு நீர் விநியோகம், முழு ஆண்டுக்கும் நீரை நிரப்ப போதுமானதாக இல்லாதபோது, அது நிலத்தடி நீர் மட்டம் குறைவால் ஏற்படும் வறட்சி (ஜலபீட ஷோஷண வரள்ச்ச) என்று அழைக்கப்படுகிறது.

(A) (i & ii) மட்டும்

(B) (i & iii) மட்டும்

(C) (ii & iii) மட்டும்

(D) (i, ii, iii, & iv) அனைத்தும் சரியானவை

11. புவியியலில் பிராந்திய அணுகுமுறையின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

(A) இப்னு பதூதா

(B) எரடோஸ்தனிஸ்

(C) ஹம்போல்ட்

(D) கார் ரிட்டர்

12. உயரத்திற்கு ஏற்ப வளிமண்டல வெப்பநிலை அதிகரிக்கும் நிகழ்வு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) வழக்கமான வீழ்ச்சி விகிதம்

(B) வெப்பநிலை தலைகீழ் மாற்றம்

(C) பூமியின் வெப்ப பட்ஜெட் (சமநிலை)

(D) சூரிய கதிர்வீச்சு

13. பின்வருவனவற்றைப் பொருத்துக:

| | |
|---|---|
| 1. 10-ஆண்டு உத்தி | (a) S.N. அகர்வால் |
| 2. காந்திய திட்டம் | (b) JRD டாடா |
| 3. தேசிய திட்டக் குழு | (c) ஜவஹர்லால் நேரு |
| 4. பம்பாய் திட்டம் | (d) M. விஸ்வேஸ்வரய்யா |

(A) 1 - d, 2 - a, 3 - b, 4 - c

(B) 1 - d, 2 - c, 3 - a, 4 - b

(C) 1 - d, 2 - a, 3 - c, 4 - b

(D) 1 - c, 2 - d, 3 - a, 4 - c

14. உலகின் மிகப்பெரிய இரும்புத் தாது சுரங்கமான கராஜஸ் சுரங்கம் (Carajas Mine) எந்த நாட்டில் அமைந்துள்ளது?

(A) சிலி
(B) ரஷ்யா
(C) ஆஸ்திரேலியா
(D) பிரேசில்

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் எந்த நிறுவனம் என அடையாளம் காணவும்:

(i) 1982 -ல் நிறுவப்பட்டது

(ii) விவசாயத் துறை மேம்பாடு, ஊரகத் துறை மேம்பாடு

(iii) ஊரக நிதி உதவிக்கான சிறந்த நிறுவனம்

(A) RBI
(B) IBRD
(C) NABARD
(D) RRB

16. பசுமைப் புரட்சி தொடர்பாக, பின்வரும் கூற்றுகளில் எது உண்மையல்ல?

(A) பசுமைப் புரட்சியால் அதிகம் பயனடைந்தவர்கள் பணக்கார விவசாயிகளே.

(B) அதிக உற்பத்தித் திறன் கொண்ட பயிர்களுக்கு பூச்சிகள் தாக்கும் வாய்ப்பு அதிகமுள்ளது.

(C) அரசாங்கத்தின் பொது விநியோக முறையின் மூலம் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு உணவு தானியங்களை அதிக மானிய விலையில் பெறுவது சாத்தியமானது.

(D) மேற்கூறிய எதுவுமில்லை.

17. 1991 ஆம் ஆண்டின் புதிய பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பாக, பின்வரும் கூற்றுகளில் எவை உண்மையானவை?

கூற்று (I): அந்நிய முதலீட்டாளர்கள் இந்தியாவில் முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

கூற்று (II): அபாயகரமான பொருட்கள் தவிர மற்ற பொருட்கள் இறக்குமதிக்கான லைசன்ஸ் நடைமுறைகள் கைவிடப்பட்டன.

கூற்று (III): நேர்முக மற்றும் மறைமுக வரிவிகிதங்கள் குறைக்கப்பட்டன.

(A) கூற்றுகள் I, II, மற்றும் III சரியானவை.

(B) கூற்றுகள் I மற்றும் II சரியானவை; III தவறானது

(C) கூற்றுகள் I மற்றும் III சரியானவை; II தவறானது

(D) கூற்றுகள் II மற்றும் III சரியானவை; I தவறானது

18. சமீபத்திய சீர்திருத்தங்களின் போது சரக்கு மற்றும் சேவை வரியின் (GST) எந்த வரி விதிப்பு அடுக்கு நீக்கப்பட்டது?

(A) 5%, 28%

(B) 12%, 28%

(C) 10%, 15%

(D) 5%, 40%

19. பின்வரும் எந்த அரசியலமைப்பு திருத்தம் சபையில் ஒருமனதாக ஒப்புதலுடன் நிறைவேற்றப்பட்டது?

(A) இடஒதுக்கீடு

(B) வயதுவந்தோர் வாக்குரிமை

(C) அடிப்படை உரிமைகள்

(D) மாநில-மத்திய உறவு

20. 1976 ஆம் ஆண்டின் 42 வது அரசியலமைப்பு திருத்தத்தின் போது இந்திய அரசியலமைப்பின் முகப்புரையில் சேர்க்கப்பட்ட வார்த்தைகள் யாவை?

(A) சமதர்மம், மதச்சார்பின்மை, ஒருமைப்பாடு

(B) ஜனநாயகம், மதச்சார்பின்மை, குடியரசு

(C) இறையாண்மை, சமதர்மம், ஒன்றிணைப்பு

(D) குடியரசு, ஒருமைப்பாடு, ஜனநாயகம்

21. பின்வருவனவற்றில் சொத்துரிமை குறித்தான தீர்ப்புகளில் தவறான கூற்று யாது?

(A) கேசவானந்த பாரதி வழக்கில் சொத்துரிமை என்பது அரசியலமைப்பு சட்டத்தின்படி அடிப்படை உரிமை அல்ல என்பது உச்ச நீதிமன்றத்தின் நிலைப்பாடு.

(B) 1976 ஆம் ஆண்டின் 42-வது அரசியலமைப்பு திருத்தத்தில், பாராளுமன்றம் அடிப்படை உரிமைகளில் இருந்து சொத்துரிமையை நீக்கியது.

(C) சொத்துரிமை இப்போது ஒரு சட்டப்பூர்வ உரிமையாகும்.

(D) சொத்துரிமை இப்போது அரசியலமைப்பின் 300A பிரிவின் கீழ் வருகிறது.

22. கீழ்க்கண்ட கூற்றுகளில் பஞ்சாயத்து ராஜ் அமைப்புடன் தொடர்பில்லாதது எது?

(A) மூன்றடுக்கு பஞ்சாயத்து ராஜ் அமைப்பு

(B) மாநில தேர்தல் ஆணையத்தின் உருவாக்கம்

(C) பெண்களுக்கான 33% இடஒதுக்கீடு

(D) மாநில பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் உருவாக்கம்

23. கீழே உள்ள கூற்றுகளிலிருந்து சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்:

(A) மத்தியப் பட்டியல் – பாதுகாப்பு, காவல்துறை, சிறைச்சாலை

(B) மாநிலப் பட்டியல் – விவசாயம், தேசிய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்

(C) பொதுப் பட்டியல் – கல்வி, வனம், தொழிற்சங்கங்கள்

(D) எஞ்சிய அதிகாரங்கள் – வெளிநாட்டு நடவடிக்கைகள், விலங்குகள் பாதுகாப்பு, நாணயம்

24. 'சிடிசன்ஷிப் & சோஷியல் கிளாஸ்' ('Citizenship and Social Class') என்ற நூலின் ஆசிரியர் யார்?

(A) டி.எச். மார்ஷல்
(B) மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர்
(C) ஜே.எஸ். மில்
(D) நெல்சன் மண்டேலா

25. மாநிலங்களவை தொடர்பாக, பின்வருவனவற்றில் எது தவறானது?

(A) மாநிலங்களவை ஒரு நிரந்தர சபை
(B) மாநிலங்களவை ஒரு கூடுதல் சபை
(C) மாநிலங்களவை உறுப்பினர்கள் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.
(D) மாநிலங்களவை மாநிலங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

26. 2023 ஆம் ஆண்டின் 106 வது அரசியலமைப்பு திருத்தம் எதனுடன் தொடர்புடையது?

(A) முற்பட்ட சாதியினரில் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான இடஒதுக்கீடு.
(B) மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீடு.
(C) மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களில் பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கான இடஒதுக்கீட்டை மேலும் 10 ஆண்டுகளுக்கு நீட்டித்தல்.
(D) இடஒதுக்கீடு நோக்கங்களுக்காக இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பட்டியலைத் தயாரிக்கும் உரிமை மாநிலங்களுக்கு வழங்கப்படுதல்.

27. இந்திய அரசியலமைப்பு தொடர்பாக, சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடுக்கவும்:

(i) அரசியலமைப்பு வரைவுக் குழு அரசியலமைப்பை உருவாக்கியது.
(ii) கேபினட் மிஷன் திட்டத்தின் மூலம் அரசியலமைப்பு நிர்ணய சபை நிறுவப்பட்டது.
(iii) அரசியலமைப்பு வரைவுக் குழு இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கும் அரசியலமைப்புகளை உருவாக்கியது.

(A) மேற்கூறிய அனைத்தும் (i, ii, iii)
(B) (i மற்றும் ii) மட்டும்
(C) (ii மற்றும் iii) மட்டும்
(D) (i மற்றும் iii) மட்டும்

28. கேரள மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் (KSDMA) தொடர்பாக, கீழே பட்டியலிடப்பட்டுள்ளவற்றில் இருந்து சரியான கூற்றை தேர்ந்தெடுக்கவும்:

(1) தலைமை அலுவலகம் திருவனந்தபுரத்தில் அமைந்துள்ளது.
(2) 2005-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
(3) வருவாய்த்துறை அமைச்சர் இதன் தலைவர் ஆவார்.
(4) KSDMA ஒரு சட்டப்பூர்வ அமைப்பு ஆகும்.

(A) 1 மற்றும் 3
(B) 2 மற்றும் 3
(C) 1 மற்றும் 4
(D) 2 மற்றும் 4

29. விகாசித் பாரத் கேரண்டி ஃபார் ரோஸ்கார் அன்ட் ஆஜீவிகா மிஷன் தகவல் அடிப்படையில் 2025-ல் மாநில ஒதுக்கீடு சதவிகிதம் எவ்வளவு?

(A) 10
(B) 40
(C) 60
(D) மேற்கண்ட எதுவுமில்லை

30. கொச்சி-பெங்களூரு தொழில்துறை வழித்தடத்தை செயல்படுத்தும் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள கேரள மாநில அரசின் ஒருங்கிணைப்பு முகமை எது?

(A) KINFRA
(B) KIIFB
(C) K-SWiFT
(D) KSIDC

31. தேசிய மகளிர் ஆணையத்தின் தற்போதைய தலைவர் யார்?

(A) ரேகா சர்மா
(B) கிரிஜா வியாஸ்
(C) பூர்ணிமா அத்வானி
(D) விஜயா கிஷோர் ரஹத்கர்

32. கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளிலிருந்து, பல்லுயிர்த் தன்மையை அழிக்கும் நான்கு காரணிகளைக் கொண்ட தொகுப்பைத் தேர்ந்தெடுக்கவும்:

(A) (i) இயற்கையான வாழ்விடத்தின் அழிவு
(ii) அதிகப்படியான சுரண்டல்
(iii) வெளிநாட்டு இனங்களின் அழிவு
(iv) அதே இனத்தைச் சேர்ந்தவைகளின் அழிவு

(B) (i) இயற்கையான வாழ்விடத்தின் அழிவு
(ii) தொழில்மயமாக்கல் மற்றும் நகரமயமாக்கல்
(iii) வெளிநாட்டு இனங்களின் படையெடுப்பு
(iv) வேட்டையாடுதல் மற்றும் விவசாயம்

(C) (i) இயற்கையான வாழ்விடத்தின் அழிவு
(ii) அதிகப்படியான சுரண்டல்
(iii) வெளிநாட்டு இனங்களின் படையெடுப்பு
(iv) அதே இனத்தைச் சேர்ந்தவைகளின் அழிவு

(D) (i) இயற்கையான வாழ்விடத்தின் அழிவு
(ii) தொழில்மயமாக்கல் மற்றும் நகரமயமாக்கல்
(iii) வெளிநாட்டு இனங்களின் படையெடுப்பு
(iv) காடு அழிப்பு

33. ________ என்பது ஒரு தன்னுடல் எதிர்ப்பு நோய் ஆகும்.

(A) மயோடோனிக் டிஸ்ட்ரோபி

(B) தாலசீமியா

(C) ஃபீனைல்கீட்டோனூரியா

(D) மயாஸ்தீனியா கிராவிஸ்

34. ____________ என்பவை இரண்டாம் நிலை வளர்சிதை மாற்றப் பொருட்கள் ஆகும்.

(i) அப்ரின், கோடீன்

(ii) அடினின், அலனின்

(iii) ரிசின், குர்குமின்

(iv) லெசித்தின், யூரிடின்

(A) (i), (ii) (B) (iii), (iv)

(C) (i), (iii) (D) (ii), (iv)

35. கொலஸ்ட்ராலில் காணப்படும் ஆன்டிபாடி எது?

(A) IgA (B) IgE

(C) IgG (D) IgM

36. __________________ என்பது வாரத்திற்கு ஒரு முறை மட்டுமே உட்கொள்ள வேண்டிய ஸ்டீராய்டு இல்லாத கருத்தடை மாத்திரை ஆகும்.

(A) LNG 20 (B) சஹேலி

(C) மாலா என் (D) மல்டிலோட் 375

37. ____________ என்பது மண்ணில் காணப்படும் தனித்த நைட்ரஜனை நிலைநிறுத்தும் பாக்டீரியாவின் பெயராகும்.

(A) ரைசோபியம் (B) அஸ்பெர்ஜிலஸ்

(C) அசோட்டோபாக்டர் (D) அசோஸ்பைரில்லம்

38. சூரியனின் வெப்பத்தை அளவிட பயன்படும் சாதனம்

(A) பிளாட்டினம் வெப்பமானி

(B) வாயு வெப்பமானி

(C) பைரோமீட்டர்

(D) நீராவி அழுத்த வெப்பமானி

39. ஒரு இயந்திரத் துப்பாக்கியால் வினாடிக்கு 'n' எண்ணிக்கையிலான தோட்டாக்களையும், ஒவ்வொன்றும் 'm' நிறை (mass) மற்றும் 'v' திசைவேகத்துடனும் சுட முடியும். இயந்திர துப்பாக்கி உணரும் விசை ________________ ஆகும்.

(A) nmv (B) $mv^2n$

(C) $\frac{mv}{n}$ (D) $n^2mv$

40. வளிமண்டலத்தின் மேல் பகுதிகளில் இருந்து நகரும் பொருளின் விடுபடு திசைவேகம் 11.2 km/s ஆகும். பூமியின் நிறையில் (mass) நான்கில் ஒரு பங்கு நிறை கொண்ட ஒரு கிரகத்தில், அதே நிறை மற்றும் ஆரம் (radius) கொண்ட ஒரு பொருளின் விடுபடு திசைவேகம் என்னவாக இருக்க வேண்டும்?

(A) 44.8 km/s

(B) 22.4 km/s

(C) 5.6 kg/s

(D) 11.2 km/s

41. பின்வருவனவற்றில் இயற்பியலில் சமீபத்தில் அதிக கவனம் பெற்ற கண்டுபிடிப்பு எது?

(A) சூப்பர் கண்டக்டிவிடி

(B) குவாண்டம் கம்ப்யூட்டிங்

(C) கிராவிடேஷனல் வேவ்ஸ்

(D) ஹைப்பர்சோனிக் விமானம்

42. கீழ்கண்டவற்றில் இரசாயன எதிர்வினைக்கு ஒரு எடுத்துக்காட்டு:

(A) மெழுகுவர்த்தி எரிதல்

(B) உணவு செரிமானம்

(C) பழம் பழுத்தல்

(D) மேற்கூறிய அனைத்தும்

43. நீர்த்த ஹைட்ரோகுளோரிக் அமிலத்திற்கும் துத்தநாகத்திற்கும் இடையிலான வேதியியல் வினையில் வெளிப்படும் வாயு எது?

(A) ஆக்ஸிஜன்

(B) ஹைட்ரஜன்

(C) நைட்ரஜன்

(D) கார்பன் டை ஆக்சைடு

44. மின்சாரத்தை மிகச் சிறப்பாக கடத்தும் உலோகம் எது?

(A) வெள்ளி

(B) அலுமினியம்

(C) இரும்பு

(D) தாமிரம்

45. சில கரைசல்களின் pH மதிப்புகள் (25 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில்) கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் அமிலமற்ற கரைசல்களின் pH மதிப்புகள் எவை?

(i) pH = 5

(ii) pH = 6

(iii) pH = 8

(iv) pH = 12

(A) (i), (ii)

(B) (ii), (iii)

(C) (iii), (iv)

(D) (i), (ii), (iii)

46. கேரளாவின் காட்சி கலைகளில் ஒன்றான 'அஷ்டபதியாட்டம்', எந்த இலக்கியப் படைப்பில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது?

(A) பஞ்சதந்திரம்

(B) நளசரிதம்

(C) கீத கோவிந்தம்

(D) கிரிஜா கல்யாணம்

47. இந்தியாவின் முதல் தேசிய அளவிலான உள்ளரங்க தடகள சாம்பியன்ஷிப் போட்டி எந்த மைதானத்தில் நடைபெற்றது?

(A) வான்கடே மைதானம் (மும்பை)

(B) ஈடன் கார்டன்ஸ் (கொல்கத்தா)

(C) எம். சின்னசாமி மைதானம் (பெங்களூரு)

(D) கலிங்கா மைதானம் (புவனேஸ்வர்)

48. யுனெஸ்கோ கலாச்சார பாரம்பரிய விழாக்களின் பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்ட இந்தியப் பண்டிகை:

(A) தீபாவளி

(B) கும்பமேளா

(C) துர்கா பூஜை

(D) கர்பா நடனம்

49. S.K. பொட்டேக்காட்டின் இலக்கியப் படைப்புகள் தொடர்பாக, பின்வரும் கூற்றுகளில் எது உண்மையல்ல?

(A) 'சஞ்சாரியுடெ கீதங்கள்' என்பது அவரது பயண அனுபவங்கள் குறித்த கவிதைகளின் தொகுப்பாகும்.

(B) 'விஷ கன்யகா' என்ற நாவல், கோழிக்கோடு அருகிலுள்ள முக்கம் என்ற தொலைதூர கிராமத்தின் பின்னணியில் அமைக்கப்பட்டுள்ளது.

(C) எஸ்.கே. பொட்டேக்காட் எழுதிய 'ஒரு தேசத்தின்டே கதா' என்ற நாவலில் தன் வாழ்க்கை வரலாற்றை விவரித்துள்ளார்.

(D) 'அச்சன்' என்பது எஸ்.கே. பொட்டேக்காட் எழுதிய நாடகத்தின் பெயராகும்.

50. ‘நேரு கோப்பை படகுப் போட்டி’ தொடர்பாக, பின்வரும் கூற்றுகளில் எது அதை சார்ந்துள்ளது?

(A) சுதந்திர தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக புன்னமடக்காயலில் படகுப் போட்டி நடத்தப்படுகிறது.

(B) செம்பகசேரியின் மன்னர் தேவநாராயணனால் கிருஷ்ணரின் சிலையை குறிச்சியில் இருந்து அம்பலப்புழைக்கு சம்பிரதாயமாக அனுப்பி வைப்பதைக் குறிக்கும் வகையில் இந்தப் படகுப் போட்டி நடத்தப்படுகிறது.

(C) படகுப் போட்டி ஓணம் கொண்டாட்டங்களுடனும், ஆறன்முளா பார்த்தசாரதி கோவிலுடனும் தொடர்புடையது.

(D) படகுப்போட்டி புராண ரீதியாக ஹரிப்பாடு சுப்ரமணிய சுவாமி கோவிலுடன் தொடர்புடையது.

51. A = ÷, B = +, C = –, D = x எனில், 15 D 2 B 14 A 7 C 10 இன் மதிப்பு என்ன?

(A) 20 (B) 21

(C) 22 (D) 23

52. 500 கிலோ அரிசி வாங்க ரூ. 25,000 முதலீடு செய்யப்பட்டது. மேலும் ஏற்றுக்கூலியாக ரூ. 900 மற்றும் போக்குவரத்திற்காக ரூ. 1500 செலவிடப்பட்டது. ரூ. 300 லாபம் ஈட்ட விரும்பினால், ஒரு கிலோ அரிசியை எவ்வளவு ரூபாய்க்கு விற்க வேண்டும்?

(A) ரூ. 54.5 (B) ரூ. 55.5

(C) ரூ. 54.3 (D) ரூ. 55.4

53. ஒரு கடிகாரத்தில், 1, 4 மற்றும் 8 ஆகிய எண்களைக் கொண்டு ஒரு முக்கோணம் உருவாக்கப்பட்டால், முக்கோணத்தின் கோணங்கள் என்னவாக இருக்கும்?

(A) 45, 60, 75 (B) 55, 50, 75

(C) 45, 60, 70 (D) 45, 50, 75

54. $(5^3 \times 5 \times \sqrt{5}) \div 5^{-7/2} = 5^{a+3}$ எனில், ‘a’ இன் மதிப்பு என்ன?

(A) 4 (B) 5

(C) 6 (D) 7

55. 4, 15, 6, 12, 8, 7, 10, _

(A) 0 (B) 1

(C) 2 (D) 3

56. 10% ஆண்டு வட்டிக்கு ரூ. 8000 ஒரு வங்கியில் டெபாசிட் செய்யப்பட்டால், அசல் தொகையானது இருமடங்காக உயர எத்தனை ஆண்டுகள் ஆகும்?

(A) 20 (B) 5

(C) 10 (D) 15

57. 8-இன் முதல் 30 மடங்குகளின் சராசரி என்ன?

(A) 200
(B) 125
(C) 130
(D) 124

58. PRINTER என்ற வார்த்தை NPGLRCP என்று குறியிடப்பட்டால், MOUSE என்பதற்கான குறியீடு என்னவாக இருக்கும்?

(A) KMQSC
(B) KQMSC
(C) KMSQC
(D) KMSCQ

59. தந்தையின் வயது மகனை விட 10 மடங்கு அதிகம். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, தந்தையின் வயது மகனின் வயதைப் போல இருமடங்கு மற்றும் 6 ஆண்டுகள் அதிகமாக இருக்கும். தந்தையின் தற்போதைய வயது என்ன?

(A) 40
(B) 30
(C) 20
(D) 10

60. ஒருவர் தனது சம்பளத்தில் 50% மகனுக்கும், 30% மகளுக்கும் கொடுக்கிறார். அவரிடம் மீதம் ரூ. 60,000 இருப்பு இருந்தால், அவர் தனது மகளுக்கு எவ்வளவு கொடுத்தார்?

(A) 50,000
(B) 90,000
(C) 80,000
(D) 30,000

**61. Complete the sentence with the correct option.**
**If you had gone there, you ______**

**(A) would meet**
**(B) would have met**
**(C) will meet**
**(D) will have met**

**62. Pick out the correctly spelt word from the following.**

**(A) Receive**
**(B) Recieve**
**(C) Reseive**
**(D) Resieve**

**63. Fill in the blank using the appropriate form of the verb.**

**The government decided to abolish ______**

**(A) ration**
**(B) rationing**
**(C) rations**
**(D) rationism**

**64. Select the appropriate question tag.**

**I am good, _______**

**(A) am I ?**
**(B) amn't I ?**
**(C) aren't I ?**
**(D) isn't I ?**

**65. Choose the correct plural form of the word LOUSE.**

**(A) Louses** **(B) Lice**

**(C) Lices** **(D) Lousen**

**66. The antonym of 'mitigate' is ______**

**(A) Aggravate** **(B) Alleviate**

**(C) Stubborn** **(D) Lessen**

**67. Use the correct preposition.**

**She is good ______ Mathematics.**

**(A) on** **(B) at**

**(C) in** **(D) for**

**68. Choose the correct article.**

**I saw _______ one-eyed man.**

**(A) an** **(B) a**

**(C) The** **(D) None of these**

**69. Past tense of shoot is _______**

**(A) shooted** **(B) shot**

**(C) shooten** **(D) shoten**

**70. Choose the correct alternative.**

**Neither of us ______ coffee.**

**(A) like** **(B) liked**

**(C) likes** **(D) liken**

71. ஒருமை பன்மையைக் குறிப்பிடும் சரியான சொற்கள் எவை?

(i) புல் - புற்கள்

(ii) யானை - குரங்கு

(iii) மாணவி - மாணவர்கள்

(iv) மரம் - செடி

(A) i, iii சரி

(B) i சரி

(C) i, iii, iv சரி

(D) இவை ஒன்றும் இல்லை

72. யானையைக் குறிக்கும் தமிழ்ச்சொற்கள் எவை?

(i) வேழம் - களிறு

(ii) கரி - களபம்

(iii) பிடி - வேங்கை

(iv) அனைத்தும் சரி

(A) i, iii சரி

(B) i, ii சரி

(C) ii, iii சரி

(D) iv சரி

73. தவறான ஜோடி எவை (ஆண்பால் - பெண்பால்)?

(A) பேரன் - பெயர்த்தி

(B) ஆசிரியர் - ஆசிரியை

(C) ஆலோசகன் - ஆலோசகை

(D) வில்லன் - வில்லி

74. பூ + சோலை என்ற சொற்கள் இணையும்போது தோன்றும் சொல் எது?

(A) பூச்சோலை

(B) பூஞ்சோலை

(C) பூசோலை

(D) பூவின் சோலை

75. செழிப்பு என்ற சொல்லின் எதிர் பொருள்

(A) களிப்பு

(B) மகிழ்ச்சி

(C) வறட்சி

(D) வனப்பு

76. செம்பயிர் - என்ற சொல்லைப் பிரித்தெழுதுக.

(A) செம்மை + பயிர்

(B) செம் + பயிர்

(C) செம்ப் + பயிர்

(D) இவை ஒன்றும் இல்லை

77. “Habits die hard” இத்தொடருக்கு இணையான பொருள் தரும் தொடரை தேர்வு செய்க.

(A) பழக பழகப் பாலும் புளிக்கும்

(B) தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்

(C) பழுத்த பழம் கொம்பிலே நிற்குமா

(D) பழி ஒரு பக்கம் பாவம் ஒரு பக்கம்

78. “ஆயிரங்காலத்துப் பயிர்” - என்ற தொடரின் பொருளை விளக்கும் தொடர்:

(A) நீண்ட காலம் வாழ்தல்

(B) நெடுங் காலமாக நிலைத்திருத்தல்

(C) காலம் காலமாக வாழ்தல்

(D) நீண்ட காலம் நிலைத்து வாழ்தல்

79. கீழ்க்காணும் வாக்கியங்களில் சரியான வாக்கிய அமைப்பை தேர்வு செய்க.

(A) ஆசிரியர் பாடம் கற்பிக்கப்பட்டது

(B) ஆசிரியரால் பாடம் கற்பிக்கப்பட்டது

(C) ஆசிரியரிடம் பாடம் கற்பிக்கப்பட்டது

(D) ஆசிரியருக்கு பாடம் கற்பிக்கப்பட்டது

80. சரியான சொல்லைத் தேர்வு செய்க.

(A) பிரம்மாண்டம்

(B) பிரமாண்டம்

(C) ப்ரம்மாண்டம்

(D) இவை ஒன்றும் இல்லை

81. அப்காரி சட்டத்தின்படி, எத்தனை வயதிற்குட்பட்ட நுகர்வோருக்கு மது விற்கப்படக்கூடாது?

(A) 18 (B) 20

(C) 23 (D) 2

82. பின்வருவனவற்றுள் எவை சரியானவை?

1. கேரளாவில் கள்ளுக்கடைகள் தொடங்கினால் கல்வி நிறுவனங்கள் மற்றும் வழக்கமான வழிபாட்டுத் தலங்களில் இருந்து 400 மீட்டருக்கு அப்பால் இருக்க வேண்டும்.
2. கேரளாவில் த்ரீ-ஸ்டார் வகை மதுபான பார்கள் தொடங்கும்போது பொது மயானங்களில் இருந்து 200 மீட்டருக்கு அப்பால் அமைக்கப்பட வேண்டும்.
3. கேரளாவில் ஃபைவ்-ஸ்டார் வகையினத்தைக் கொண்ட பார்கள் தொடங்கினால் எஸ்.சி/எஸ்.டி காலனிகளில் இருந்து 50 மீட்டர் தூரத்தில் அமைக்க வேண்டும்.
4. கேரளாவில் சுற்றுலாத் தலங்கள் அல்லாத பிற இடங்களில் புதிய பீர் பார்லர்களைத் தொடங்கும்போது, வழக்கமான வழிபாட்டுத் தலங்களில் இடைவெளியைப் பராமரிப்பது கட்டாயமில்லை.

(A) 2, 3, 4 சரியானவை

(B) 1, 3, 4 சரியானவை

(C) 1, 2, 4 சரியானவை

(D) 1, 2, 3 சரியானவை

83. கேரளாவில் ஒருவர் சட்டப்பூர்வமாக வைத்திருக்கக்கூடிய அதிகபட்ச மதுபானத்தின் அளவு என்ன?

1. கள்ளு – 1.5 லிட்டர்

2. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானம் – 2.5 லிட்டர்

3. வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானம் – 2.5 லிட்டர்

4. பீர் – 3.5 லிட்டர்

(A) 1, 2, 3 சரியானவை

(B) 1, 3, 4 சரியானவை

(C) 2, 4 சரியானவை

(D) 2, 3, 4 சரியானவை

84. அருந்தக்கூடிய ஆல்கஹாலின் வேதியியல் சூத்திரம் என்ன?

(A) $CH_3OH$

(B) $C_2H_5OH$

(C) $C_6H_6O_6$

(D) $CH_3COOH$

85. பின்வருவனவற்றில் போதைப்பொருள் எது?

(A) MDMA

(B) நைட்ராசெபம்

(C) கருப்பு (ஓபியம்)

(D) LSD

86. NDPS சட்டத்தின்படி, குற்றத்தில் ஈடுபட்டவருக்கு மாண்புமிகு நீதிமன்றம் விதிக்கக்கூடிய அதிகபட்ச தண்டனை என்ன?

(A) 20 வருடக் கடுங்காவல் தண்டனை மற்றும் ரூ. 2 லட்சம் அபராதம்

(B) 10 வருடக் கடுங்காவல் தண்டனை மற்றும் ரூ. 1 லட்சம் அபராதம்

(C) 20 வருடக் கடுங்காவல் தண்டனை மட்டுமே

(D) மரண தண்டனை

87. டிஸ்டில்லரீஸ் மற்றும் வேர்ஹவுஸ் விதிகளின்படி, கிடங்கு என்பது பிணைக்கப்பட்ட வளாகமாக (bonded premises) இருக்க வேண்டும் என்ற கூற்றின் பொருள் என்ன?

(A) அவ்விடத்தில் முழுதும் வரி செலுத்தப்பட்ட மதுவகைகளை மட்டுமே சேமிக்கப்பட வேண்டும்.

(B) வரி செலுத்தாத மது வகைகளை அரசாங்கத்தின் மேற்பார்வையின் கீழ் சேமித்து வைக்கலாம்.

(C) தனியாருக்குச் சொந்தமான இடத்தில் இருக்கும் சேமிப்பு கிடங்கு

(D) நீதிமன்றங்களால் அங்கீகரிக்கப்பட்ட சேமிப்பு கிடங்கு

88. டிஸ்டில்லரீஸ் விதிகளின்படி, மதுபானம் இருப்புகளில் இழப்பு மற்றும் கசிவு ஏற்பட்டால், அதன் பொறுப்பு யாருடையது?

1. போக்குவரத்து நிறுவனம்
2. கலால் துறை
3. சம்பந்தப்பட்ட உரிமம் பெற்றவர்
4. மாவட்ட நிர்வாகம்

(A) 1 மற்றும் 2
(B) 2 மற்றும் 4
(C) 3
(D) 3 மற்றும் 2

89. கேரளாவில், டிஸ்டில்லரீஸ் சட்டம் அமல்படுத்தப்பட்ட ஆண்டு:

(A) 1077
(B) 1968
(C) 1965
(D) 1963

90. பின்வருவனவற்றில் கேரளாவில் ட்ரை டே இல்லாத நாள் எது?

(A) ஸ்ரீ நாராயண குரு ஜெயந்தி
(B) புனித வெள்ளி
(C) கிறிஸ்துமஸ் தினம்
(D) சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினம்

91. கேரள அரசால் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலா பகுதிகளில் உள்ள பார் ஹோட்டல்களுக்கான வேலை நேரம்:

(A) காலை 10.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை
(B) காலை 9.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை
(C) காலை 10.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணி வரை
(D) காலை 10.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை

92. நான்கு நட்சத்திர ஹோட்டலுக்கு FL-3 உரிமம் (பார்) பெற, கல்வி நிறுவனங்கள், வழிபாட்டுத் தலங்கள், தேவாலயங்கள் மற்றும் மயானங்களில் இருந்து எவ்வளவு தூரம் இருக்க வேண்டும்?

(A) 150 மீட்டர்
(B) 50 மீட்டர்
(C) 400 மீட்டர்
(D) 250 மீட்டர்

93. COTPA-2003-இன் படி,

(A) 18 வயதிற்குட்பட்ட நுகர்வோருக்கு புகையிலை தொடர்பான பொருட்களை விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

(B) கல்வி நிறுவனங்களில் இருந்து 100 மீட்டர் சுற்றளவுக்குள், புகையிலை தொடர்பான பொருட்களை விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

(C) (A) & (B)

(D) 20 வயதிற்குட்பட்ட நுகர்வோருக்கு புகையிலை தொடர்பான பொருட்களை விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

94. COTPA-2003-இன் படி, 30 க்கும் மேற்பட்ட அறைகளைக் கொண்ட ஹோட்டல்களிலும், 30 க்கும் மேற்பட்ட இருக்கை வசதி கொண்ட உணவகங்களிலும், விமான நிலையங்களிலும்,

(A) புகைப்பிடிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

(B) சிறப்பு புகைபிடிக்கும் இடங்களை ஏற்படுத்த வேண்டும்.

(C) விதிகளை மீறி புகை பிடித்தால் ரூ. 250 அபராதம் வசூலிக்க வேண்டும்.

(D) மேற்கூறிய எதுவுமில்லை.

95. COTPA-2003-இன் படி, சிகரெட் பெட்டிகளிலோ அல்லது புகையிலைப் பொருட்களின் பாக்கெட்டுகளிலோ ஆங்கில லேபிள்கள் பயன்படுத்தப்பட்டால்,

(A) எச்சரிக்கை ஆங்கில மொழியில் வழங்கப்பட வேண்டும்

(B) எச்சரிக்கை ஆங்கிலம் மற்றும் இந்தியில் அச்சிடப்பட வேண்டும்.

(C) எச்சரிக்கை ஆங்கிலம், இந்தி மற்றும் ஏதேனும் ஒரு இந்திய மொழியில் அச்சிடப்பட வேண்டும்.

(D) மேற்கூறிய எதுவுமில்லை.

96. விமுக்தி மிஷனின் திட்டத்தின்படி, கல்லூரி வளாகத்தில் மாணவர்கள் மது அருந்துவதைத் தடுப்பதற்காக, முதல்வர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) உணர்வு | (B) ஷ்ரத்தா
(C) நேர்கூட்டம் | (D) நேர்வழி

97. விமுக்தி மிஷனின் அதிகாரபூர்வ (ex-officio) தலைவர் யார்?

(A) கலால் ஆணையர்

(B) முதலமைச்சர்

(C) கலால் அமைச்சர்

(D) விமுக்தி மிஷனின் தலைமை நிர்வாக அதிகாரி

98. பின்வருவனவற்றில் எது விமுக்தி மிஷனுடன் தொடர்பில்லாதது?

(A) விழிப்புணர்வு

(B) போதை ஒழிப்பு

(C) ஆலோசனை

(D) போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மீது சட்ட நடவடிக்கை

99. ஒரு உணவகப் பணியாளர் உணவகத்தின் குளியலறையில் மொபைல் ஃபோனை மறைத்து வைத்து வீடியோக்களை பதிவு செய்து, அவற்றை ஆபாச இணையதளத்தில் பதிவேற்றினார். இந்த வழக்கில், தகவல் தொழில்நுட்ப சட்டம், 2000-இன் கீழ் தொடர்புடைய மிகவும் கடுமையான பிரிவு/பிரிவுகள் பின்வருவனவற்றில் எவை?

(A) பிரிவு 66E மட்டும்

(B) பிரிவுகள் 66E மற்றும் 67

(C) பிரிவுகள் 66E மற்றும் 67A

(D) பிரிவு 66E மற்றும் 67B

100. ஒரு அரசு அதிகாரி, தனது அதிகாரப்பூர்வப் பதவிக் காலத்தில் அவருக்கு கிடைத்த ஆதார் அட்டைகளின் டிஜிட்டல் நகல்களை அவர் தனது நண்பரிடம் ஒப்படைத்தார். தகவல் தொழில்நுட்ப சட்டம், 2000-இன்படி எந்தப் பிரிவின் கீழ் இது ஒரு குற்றமாகும்?

(A) பிரிவு 43

(B) பிரிவு 65

(C) பிரிவு 70

(D) பிரிவு 72

SPACE FOR ROUGH WORK

SPACE FOR ROUGH WORK

SPACE FOR ROUGH WORK